சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி.163/2017

**PW 3 - கோபாலகிருஷ்ணன்** 30.01.2026

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>

எங்களது நிறுவனத்தில் வருகை பதிவேடு பொறுத்து பயோ மேட்ரிக் சிஸ்டம் நடைமுறையில் உள்ளது என்பதை பொறுத்து அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது காரணம் விபத்தில் கோரியுள்ள பதிவுகள் 8 வருடம் ஆன நிலையில் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது. எங்களது நிறுவனத்தில் வருகை பதிவேடு ஆவணம் தனியாக பராமரிக்கப்படுகிறதா என்றால் இல்லை. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் இறந்து போன நபர் எங்களது நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை என்றும் அவர் நிரந்தர பணியாளர் இல்லை என்றால் சரியல்ல. இறந்து போன நபரின் சம்பள விவரத்தை பொறுத்த வங்கி கணக்கு விவரங்களை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது காரணம் வங்கி கணக்கு முடிக்கப்பட்டுவிட்டது அதனால் தாக்கல் செய்ய முடியாது. நான் சொல்வது பொய் என்றும், இறந்து போன நபருக்கு நான் சொல்வது போல் எந்த சம்பளமும் வழங்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல, எங்களது நிறுவனம் தொடர்ந்து நடந்து வருகிற காரணத்தினால் கணக்கு முடிக்கப்பட்டுவிட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல Form 16 ஆனது மனுதாரர் இழப்பீடு பெற வேண்டி தயாரிக்கப்பட்ட ஒன்று என்றால் அது சரியல்ல. எங்களது நிறுவனத்தில் இருந்து வருமான வரித்துறைக்கு Saral தாக்கல் செய்யப்படுமா என்றால் தாக்கல் செய்யப்படும், அதில் ஒரு பணியாளருக்கு மட்டும் தனியாக

எடுக்க முடியாது. இறந்து போன நபருக்கான வருமான வரித்துறைக்கு செலுத்திய வருமான வரி கால்குலேசன் சீட் தாக்கல் செய்ய முடியுமா என்றால் என்னுடைய மேல் அதிகாரியை கேட்டு தான் கூற முடியும். இறந்து போன நபர் அதிக இழப்பீடு பெற வேண்டி அவரின் வருமானத்தை அதிகமாக குறிப்பிட்டு காட்டுவதற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி